செ.வெ.எண்.20 நாள்: 09.11.2019

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் வேளாண்மைத்துறையின் மூலம் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் - சத்துமிகு சிறுதானியங்கள் மாவட்ட அளவிலான விவசாயிகள் கருத்தரங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து சத்துமிகு சிறுதானியங்கள் கையேட்டினை வெளியிட்டார்.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் வேளாண்மைத்துறையின் மூலம் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் - சத்துமிகு சிறுதானியங்கள் மாவட்ட அளவிலான விவசாயிகள் கருத்தரங்கு இன்று (09.11.2019) நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் கருத்தரங்கினை துவக்கி வைத்து சத்துமிகு சிறுதானியங்கள் கையேட்டினை வெளியிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் சிறுதானிய பயிர்கள் பயிரிடுவது மிக குறைவான அளவாகவே உள்ளது. சிறுதானிய பயிர்கள் உடலுக்கு அதிக அளவிலான ஆரோக்கியம் தருபவைகளாக உள்ளன. சத்துமிகு சிறுதானியங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. நமது பாரம்பரிய உணவு வகைகளில் அதிக அளவில் சிறுதானியங்கள் இடம்பெற்று வந்தன. சிறுதானியங்கள் உடல் ஆரோக்கியத்திற்கு உகந்ததாக இருப்பதால் இவைகளின் உற்பத்தியையும் மக்கள் பயன்பாட்டினையும் அதிகரிக்க இதுபோன்ற கருத்தரங்குகள் நடத்தப்படுகிறது. இந்த கருத்தரங்கிற்கு முன்னதாக சமூக நலத்துறை மூலம் சிறுதானியங்களில் செய்யப்படும் உணவு வகைகள் குறித்த கண்காட்சி நடத்தப்பட்டது. மேலும், இங்கு சிறுதானியங்களால் செய்யப்பட்ட பல்வேறு உடனடி உணவு பொருட்கள் குறித்தும் இங்கு காட்சிப்பொருள் வைக்கப்பட்டது. விவசாயிகள் சத்துமிகு சிறு தானியங்கள் இலாபகரமாக விளைவிப்பது குறித்தும் மக்களின் தேவை எவ்வாறு உள்ளது என்பது குறித்தும் அறிந்து கொள்ள வேண்டும். மேலும் சத்துமிகு சிறுதானியங்களுக்கு வேளாண்மைத்துறையின் மூலம் வழங்கப்படும் மானியங்கள் குறித்தும் தெரிந்துகொள்ள வேண்டும். விளைவிக்கப்பட்ட சத்துமிகு சிறுதானியங்களை சந்தைப்படுத்தும் தொழில்நுட்பங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும். இங்கு கூறப்படும் கருத்துக்களை இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளாத மற்ற விவசாயிகளுக்கும் எடுத்து சொல்லி வரும் ஆண்டுகளில் தூத்துக்குடி மாவட்டத்தில் சத்துமிகு சிறுதானிய பயிர்கள் உற்பத்தி பரப்பினை பல மடங்கு அதிகரித்து அதிக உற்பத்தியை செய்திட வேண்டும். இதன் மூலம் விவசாயிகள் சிறப்பாக இலாபம் ஈட்ட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் திரு.ஆசீர்கனகராஜன், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.பாலசுப்பிரமணியன், தேசிய உணவு பாதுகாப்பு இயக்க மாநில ஆலோசகர் திரு.தனசேகரன், வேளாண்மை துணை இயக்குநர்கள் திருமதி.தமிழ்மலர், திரு.ராஜாசிங், வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் திரு.ஜாகீர்உசேன், விளாத்திகுளம் ஒன்றிய வேளாண்மை உதவி இயக்குநர் திரு.பூவண்ணன், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) திருமதி.வசந்தி மற்றும் வேளாண் துறை அலுவலர்கள், விவசாயிகள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.